பக்கங்கள் 19+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 17 புதன்கிழமை 30.04.2025 | அதிர்வு 270

## இந்தியக் காங்கிரஸ் எம்.பி. யாழ்ப்பாணத்துக்கு வருகை

(ந.லோகதயாளன்)



இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில்

04 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்க

# இலங்கைக்கு நிபந்தனை விதியுங்கள்! இதுதான் தமிழர்களின் எதிர்பார்ப்பு!!

### ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவிடம் மனோ எம்.பி. எழுத்து மூல 5 அம்சக் கோரிக்கைகளும் சமர்ப்பிப்பு

“சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இலங்கை தொடர்பில் ஐ.நாவில் பிரதான பங்களிப்புச் செய்த அமெரிக்காவும் இன்று ஒதுங்கி விட்டது. இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதைப் புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள்.”

- இவ்வாறு இலங்கைக்கு வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்கலாமா? என ஆய்வு செய்து அறிக்கையைச் சமர்பிக்க கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

05 ▶

# செம்மணி மனிதப் புதைகுழியில் மே 15ஆம் திகதி அகழ்வுப் பணி!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் – செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில், மே மாதம் 15ஆம் திகதியன்று அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான கலந்துரையாடல்

04 ▶






# காஷ்மீர் தாக்குதலுக்கு எதிராக கொழும்பில் இன்று போராட்டம்

(எஸ்.ஜினோதன்)

**காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு எதிராகக் கொழும்பில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**கடந்த 21 ஆம் திகதி ஜம்மு - காஷ்மீரின் பஹால்காம் பகுதியில் பைசரன் எனும் புகழ்பெற்ற சுற்றுலாத் தளத்தில் முகமூடி அணிந்த பயங்கரவாதிகள், அங்கு கூடியிருந்த மக்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். இந்தச் சம்வத்தில் 26 அப்பாவி சுற்றுலாப் பயணிகள் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர்.**

இது கண்டிக்கத்தக்க விடயம் எனக் கூறி சர்வதேச அரங்கில் பாரிய எதிர்ப்பு பாகிஸ்தானுக்கு எதிராகக் கிளம்பி இருந்த நிலையில், தற்போது இலங்கையில் காஷ்மீர் தாக்குதலுக்கு எதிராகக் கொழும்பில் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் “எமது தலை முறை கட்சி”யின் தலைவர் சிதம்பரம் கருணாநிதி தலைமையில் இடம்பெற்றது.

போராட்டத்தின் நிறைவில் சிதம்பரம் கருணாநிதி கருத்துத் தெரிவிக்கும்போது,

”காஷ்மீரில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது. பயங்கரவாதத்தை – தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்க வேண்டும்.” – என்றார்.



# இலங்கைக்கு முழுமையாக உதவுவோம்

## சீனத் தூதுவர் கி ஷென் ஹொங் தெரிவிப்பு



"இலங்கை இன்று கொந்தளிப்பான வர்த்தக உலகத்துக்குள் முழுமையாகச் சிக்கியுள்ளது. இலங்கையின் உரிமைகள் குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து மீள்வதற்கு சீனா இலங்கைக்கு உதவும்."

– இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென் ஹொங் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எந்தப் பொருளாதார புயலாலும் பாதிக்கப்படாத வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியது இலங்கை அரசின் முன்னுரிமைக் குரிய விடயமாக உள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்புகள் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும். மிகவும் வறிய நாடுகள் மோசமான தாக்கத்தை எதிர்கொள்ளும்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில் அபிவிருத்திக்கான இலங்கையின் உரிமை குறைமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பலவீனமான பொருளாதாரத்தின் மீது அதிகளவு அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. அமெரிக்கா தனது மேலாதிக்கத்தையும், அதிகார அரசியலையும் முன்னெடுப்பதற்காக வரிகளை பயன்படுத்துகின்ற சூழ்நிலையில், இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கவும், உலகளாவிய வர்த்தக பதற்றங்களை எதிர்கொள்வதற்கும் சீனா முழுமையான உதவிகளை இலங்கைக்குச் செய்யும்.

உலகளாவிய கண்டனங்களை மீறி அமெரிக்கா ஒரு வரிப்போரை முன்னெடுக்கின்றது. ஆதலால், உலகம் கொந்தளிப்பான புதிய காலகட்டத்தில் நுழைகின்றது. ஆனால், ஒருதலைப்பட்சமான இந்த பொருளாதாரப் போக்குகளை அடியோடு நிராகரிப்பதற்கான திறன் சீனாவுக்கு உள்ளது. இந்தப் புதிய பொருளாதாரப் போக்குகளுக்கு எதிராக வெற்றிபெறக்கூடிய நம்பிக்கையும் சீனாவிடம் இருக்கின்றது.

கொந்தளிப்பான உலகத்தை எதிர்கொள்ளும் இலங்கையும், தனது சொந்த சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களை இன்னமும் உறுதியாகப் பாதுகாக்க வேண்டும். சீனா மிகவும் நம்பகரமான சகா என்பதை இலங்கை நம்பவேண்டும். அமைதி மற்றும் வளர்ச்சியின் போக்கை பின்பற்றவேண்டும். மேலும் புவிசார் அரசியல் கூட்டு மோதல்களையும் ஒருதலைப்பட்சவாதத்தையும் இலங்கை எதிர்க்க வேண்டும்." – என்றார்.



## 500 கிலோ மஞ்சளுடன் இளைஞர் ஒருவர் கைது!

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 500 கிலோ மஞ்சள் மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே, மேற்படி மஞ்சள் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் 25 வயதுடைய இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணையின் பின்னர் அவர் சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.



## பருத்தித்துறை கடற்பரப்பில் 338 கிலோ கஞ்சா சிக்கியது!

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து 338 கிலோ கஞ்சா நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அடக்குமுறை: விசாரித்து அறிக்கையிடுமாறு ஆணைக்குழு அறிவுறுத்து!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரித்து அறிக்கையிடுமாறு யாழ். பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது ஒழுக்காற்று




உத்தியோகத்தர்கள் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் செயற்படுகின்றனர். அத்துடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை விதிகளை மீறியும் செயற்படுகின்றனர் என்று மாணவர்கள் மூவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

இதைத் தொடர்ந்தே இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையிடுமாறு யாழ். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக நிர்வாகத்தை அறிவுறுத்தியுள்ளது.

### சப்ரகமுவ மாகாண சபையில்

# 7 கோடி ரூபா நிதி மோசடி: இருவர் விளக்கமறியலில்!

(எஸ்.ஜினோதன்)

சப்ரகமுவ மாகாண சபையில் இடம்பெற்ற ஏழு கோடி ரூபா நிதி மோசடி தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏழு கோடி ரூபாவுக்கும் மேலதிகமாக அரச நிதியை மோசடி செய்த மேற்படி சம்பவம் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் செயலாளரும் மற்றும் சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் உதவி திட்டப் பணிப்பாளரும் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் மே 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் அவர்களை வைக்குமாறு எம்பிலிப்பிட்டி மாஜிஸ்திரேட் நீதி



மன்ற நீதிவான் திலின மஹேஷ் பீரிஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண சபையின் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள தேவப்பிரிய விஜயராஜ மற்றும் சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் உதவி திட்டப்பணிப்பாளர் குசும்லதா குமாநாயக்க ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள 7 கோடியே 16 இலட்சத்துக்கும் மேற்பட்ட நிதியை மோசடி செய்த சம்பவத்தில் இவர்கள் இருவரையும் சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக எம்பிலிப்பிட்டி பிரதேச முன்னாள் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரி ஆகியோரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கணேமுல்ல சஞ்சீவ படுகொலை வழக்கு: முன்னாள் சிறை அதிகாரிக்குப் பிணை!

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிறைச்சாலை அதிகாரியைப் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரியே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவ கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### செம்மணி...

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சபையின் பிரதிநிதிகள், சட்டமருத்துவ அதிகாரிகள், பொலிஸார், என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிட்ட தரப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

புதைகுழியை அகழ்வதற்கான நிதி மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், மே மாதம் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஆய்வுப் பணிகளை முன்னெடுத்த, மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வ–தற்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார். ஆதலால், அவர் எதிர்வரும் 3ஆம் திகதியளவில் அங்கு ஆரம்பகட்ட கள ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.

சிந்துப்பாத்தி மயானத்தில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட 40 சிதிலங்களில் இரண்டு சிதிலங்கள் விலங்குகளின் என்புகள், ஏனைய அனைத்தும் மனித என்புத் தொகுதிகளுடன் தொடர்புடையவை என்ற விடயம் ஏற்கனவே நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியக் காங்கிரஸ்...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

இந்தியாவின் தமிழ்நாடு – திருவள்ளூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான சசிகாந்த் செந்தில் யாழ்ப்பாணத்தில்

பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரின் ஏற்பாட்டில் பல்வேறு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதையடுத்து வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பலரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் நாளை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதான மே தின எழுச்சிக் கூட்டம் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் யாழ்ப்பாணம் – வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றும் இந்த மே தினக் கூட்டத்தில் அனைத்து தொழிலாளர்களையும், ஆதரவாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கட்சியின் தலைமைப்பீடம் அழைப்பு விடுத்துள்ளது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இலங்கைக்கு நிபந்தனை...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம், உண்மை ஆணைக்குழு மூலம் காணாமல்போனோர் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்த பூர்வ நடவடிக்கை, நீண்டகால தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களைக் கொண்ட மலையகத் தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ் மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும், உரையாடல் மூலமாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் மனோ கணேசன் எம்.பி. நேரடியாகச் சமர்ப்பித்தார்.

இந்த நிபந்தனைகளைத் திகதி குறித்து நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும் என்றும் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கண்காணிப்புக் குழுவுக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவுக்கும் இடையியிலான சந்திப்பு – உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகத்தில் நேற்று இடம் பெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி., ஜ.ம.மு. சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி, ஜ.ம.மு. சட்ட விவகார செயலாளர் சக்சின் கணேசன் ஆகியோரும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் தூதுவர் கார்மென் மொரேனோ, அரசியல் செயலர், கரோலினா மற்றும் ஐந்து பேர் கொண்ட ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரும் கலந்துரையாடலில் இடம் பெற்றனர்.

இது தொடர்பில், மனோ எம்.பி. தலைமையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளித்த முன்மொழிவுகள் அடங்கிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

(01) பயங்கரவாதத் தடைச் சட்டம்

இன்றைய தேவைக்கு குற்றவியல் சட்டக்கோவை தாராளமாக போதுமானது. இதுவே ஜே.வி.பியின் கடந்த கால நிலைப்பாடாக இருந்தது. எனினும், புதிய சட்டம் அவசியமாயின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் புதிய மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் வரை இன்றைய பயங்கரவாதத் தடைச் சட்டாவனை உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும்.

(02) புதிய அரசமைப்பு

இந்த அரசு தேர்தல் வேளையில், கடந்த நல்லாட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட புதிய அரசமைப்புப் பணியை நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீள ஆரம்பிப்போம் என உறுதியளித்தது. அவ்வேளையில் நானும், இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அந்தப் புதிய அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் இருந்தோம். இந்தப் பணி இந்த வருடமே செய்து முடிக்கப்பட வேண்டும். வருடங்கள் கடந்தால் இதை ஒருபோதும் செய்து முடிக்க முடியாது என்பது எமது அனுபவமாகும். ஆகவே, இன்று ஒத்–திவைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு கலந்துரையாடல் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

(03) பொறுப்புக்கூறல்

உடனடியாக உண்மை ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் அடிப்படையில் வலிந்து காணாமல்போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

(04) தமிழ் அரசியல் கைதிகள்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதாகி சிறையில் இருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இன்று பத்து தமிழ் கைதிகள் நீண்டகாலமாக உள்ளனர். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கைதிகளின் பெயர் பட்டியல் விவரங்களைக் ”குரலற்றவர்களின் குரல்” அமைப்பின் சார்பாக மு. கோமகன் தயாரிக்க, மக்கள் போராட்ட முன்னணி சார்பாக தோழர் ராஜ்குமார் ராஜீவ்காந்த் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அது இங்கே ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புக் குழுவினரிடம் தரப்படுகின்றது.

(05) பெருந்தோட்ட மக்கள்

மலையகத் தமிழ் மக்கள் பரப்பில் இருக்கின்ற பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் மிகவும் நலிவுற்ற பிரிவினர். இந்த மக்களின் நிலைமை இனிமேல் ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்பின் கீழ் வர வேண்டும். அதற்கான தரவுகள்:–

(அ) தோட்டங்களில் உற்பத்தியாகும் தேயிலை ஐரோப்பிய காலை உணவு மேசை வரை செல்லும் விநியோக பாதையின் ஆரம்பமான பெருந்தோட்டங்கள் நவீன அடிமைத்துவ அம்சங்களை கொண்டிருக்கின்றமை.

(ஆ) அரசின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பெருந்தோட்ட மக்களைப் போதுமான அளவு உள்வாங்காததால், அவர்கள் தனியார் கம்பனிகளின் தயவில் வாழ வேண்டி உள்ளமை.

(இ) நவீன அடிமைத்துவ தினக்கூலி தொழிலாளர் என்ற நிலையில் இருந்து, பெருந்தோட்ட தொழில் துறையில் கூட்டுப் பங்காளராக மாறுகின்ற கூட்டு வர்த்தக மாற்றம் வராமை.

(ஈ) தேசிய நீரோட்டத்தில் இருந்து திட்டமிட்ட முறையில் தள்ளிவைக்கப்பட்ட காரணத்தால், சம உரிமை மறுக்கபட்டு, நில உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை, வாழ்வாதார உரிமை ஆகியவை மறுக்கபட்டு, பொது நிர்வாக, சமூக கட்டமைப்பு மற்றும் நாட்டின் பொது நல சேவைகள் கிடைக்காமை.

– என்றுள்ளது.



# மே தினத்தையொட்டி நாளை விசேட போக்குவரத்துத் திட்டம்

மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை விசேட போக்குவரத்துத் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மே தினத்தை முன்னிட்டு கொழும்பு மாவட்டத்தில் உள்ள சுமார் 15 இடங்களில் மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன்படி, கொழும்பு – காலிமுகத் திடல், பி. டி சிறிசேன மைதானம், தபால் திணைக்களம், கொழும்பு ஹைட் பார்க் மைதானம், விகார மகாதேவி பூங்கா, லலித் அத்துலத் முதலி மைதானம், புனித மைக்கல் தேவாலயம், கொழும்பு மாநகர சபை மண்டபம் உள்ளிட்ட பல இடங்களில் மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், நுவரெலியா தலவாக்கலையில் விசேட மே தின கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

எனவே, மே தினத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டங்களுக்காகப் பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




# பல்கலைக்கழகங்களுக்கு மூன்று நாட்கள் விடுமுறை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மூன்று நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முட்டாள் வேலை!

'ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்' என்று ஒரு பழமொழி உண்டு.

கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வரை பொது மேடைகளில் தேசிய மக்கள் சக்தி பேசியவற்றையும் இப்போது தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக ஏனைய தரப்புகள் பேசுகின்றவற்றையும் பார்க்கின்ற போது இந்தப் பழமொழி தான் நினைவுக்கு வருகிறது.

அதனை சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

ராஜபக்ஷகள் மீதும், கடந்த அரசாங்கங்கள் மீதும் சுமத்திய குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காகவே நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கினார்கள். ஆகவே மக்களின் எதிர்பார்ப்பை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக சட்டத்தின் முன் நிரூபிக்க வேண்டும் என அரசுக்கு சவால் விடும் பாணியில் அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

''ராஜபக்ஷக்கள் திருடர்கள், அபிவிருத்திக் கருத்திட்டங்களில் நிதி மோசடி செய்தார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணி பல ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாகக் குற்றஞ் சாட்டியது. ராஜபக்ஷக்களை விமரிசிக்காமல் கடந்த காலங்களில் தேர்தல் கூட்டங்களை மக்கள் விடுதலை முன்னணி நடத்தவில்லை.

அந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காகவே நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கினார்கள். ஆகவே மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக சட்டத்தின் முன் நிரூபிக்க வேண்டும்.'' - என்று அவர் அரசிடம் வெளிப்படையாகக் கோரியிருக்கின்றார்.

அதிகாரத்துக்கு வரும் முன்னர் ஜே.வி.பியும் உட்பட்ட தேசிய மக்கள் சக்தி இவ்விடயத்தில் பண்ணிய சண்டப்பிரசண்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் அரசுப் பதவியை ஏற்று ஆறு மாதங்கள் கடந்தும் அத்தகைய விசாரணைகளில் ஏதும் முன்னேற்றங்கள் இருக்கின்றன என்பது போன்ற தோற்றம் கூடத் தெரியவில்லை.

இங்கொன்றும் அங்கொன்றுமாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் அரசு அதிகாரிகள் மட்டத்தோடு நிற்கின்றன. முன்னாள்அரசுத் தலைவர்களைத் தொடர்புபடுத்தும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விடயங்களில் பெரும் முன்னேற்றம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி பண்ணிய ஆரவாரம் வெற்று வேட்டாகப் போவது இரண்டு சிக்கல்களைத் தரும்.

ஒன்று - தேசிய மக்கள் சக்தி வெறும் அபவாதக் குற்றச்சாட்டுகளையே முன்வைத்து வந்தது, அவை ஆதாரமற்றவை, வெறும் வாய்ச் சவடால் விவகாரங்கள்தான் என்ற முடிவுக்கு மக்கள் வருவர் என்பது. அதன் பாதிப்பு தேசிய மக்கள் சக்திக்கு மட்டும்தான்.

அடுத்தது - தேசிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியமை போன்று ராஜபக்ஷக்கள் எந்தத் தவறும் இழைக்கவில்லை என்ற ஒரு நற்சான்றிதழும் ராஜபக்ஷக்கள் தரப்புக்கு வந்து விடும்.

உண்மையை நிரூபிக்க லாயகற்ற தேசிய மக்கள் சக்தி, வெறும் அபவதாக் குற்றச்சாட்டுகளை முன் வைத்ததன் மூலம் கடைசியாக ராஜபக்ஷகளுக்கு நற்சான்று பெற்றுக் கொடுக்கும் முட்டாள்தனமான வேலையைத்தான் செய்து முடிக்கப் போகின்றது போல தோன்றுகின்றது.



# இசைத்தொகுப்பு வெளியீட்டு விழா

**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பு ஸ்ரீ கிருஷ்ணாஸ் கலை யகத்தின் படைப்பில் திவ்விய ஒளி கலைமன்றத்தின் வெளியீடான உடப்பு பூரின் சித்திரைச் செவ்வாய் மரபு வழி பாடல்கள் சம்பந்தமான இசைத்தொகுப்பு வெளியீட்டு விழா உடப்பு இந்துக் கலா சார மண்டபத்தில், ஐ.வேல்முருகன் தலைமையில் திங்கட்கிழமை இடம் பெற்றது.உடப்பூரின் மரபு வழி வந்த பல கலையம்சத்தை எடுத்துக் காட்டும் மற்றும் இந்த ஒலி, ஒளி வடிவான இசைத் தொகுப்பு பல காலமாக பாது காத்துக் கொள்ள வேண்டிய ஒரு பொக் கிஷமாகும் என்பதை ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் ஆசியு ரையில் குறிப்பிட்டார்.

இதில் இசைத் தொகுப்பு பாடல் களைப் பாடியவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமும் வழங்கப்பட்டது.

இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.கந்தசாமி மற்றும் இசை ஆர்வலர்கள் கலந்து கொண்டு இவ் விழாவை சிறப்பித்தனர்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE




# போதையற்ற வலி.கிழக்கை கட்டியெழுப்புவோம்!

### *வலி கிழக்கு சுயேச்சை குழு 2 வேட்பாளர் சிவனிக்சன்*

**(எஸ். நிதர்ஷன்)**

மக்களின் எதிர்கலத்தை சீர்செய்யும் இலக்குடன் போதையற்ற வலி. கிழக்கை கட்டியெழுப்ப முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சுட்டிக்காடிய வலி. கிழக்கு சுயேச்சை குழு 2, வேட்பாளர் சிவயோகராசா சிவனிக்சன் தெரிவித் துள்ளார். அந்த முயற்சியில் வெற்றிபெற வாய்ப்பை வழங்குங்கள் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இளம் தொழிலதிபர் சுலக்சன் தலை மையிலான குறித்த சுயேச்சைக் குழு வானது பிரதேசத்தின் அபிவிருத்தியுடன் சட்டவிரோத செயற்பாடுகள், மற்றும் போதைப்பொருள் பாவனையை இல்லா தொழித்து வளமான பிரதேசமாக வலி கிழக்கை மாற்றியமைக்கும் நோக்கை இலக்காக கொண்டே செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

பல கட்சிகள் எமது பிரதேசத்தின் நலன்களை சீர் செய்வதாக கூறி ஆட்சி அதிகாரங்களை பிடித்திருந்தபோதும் அவர்கள் கூறிய எதனையும் இதுவரை செய்ததாக தெரியவில்லை.

ஆனால் சுயேச்சைக் குழுவான நாம் மக்களின் நலன்களை மையமாக கொண்டே அவர்களின் ஆதரவுடன் கோடலி சின்னத்தில் களமிறங்கி யுள்ளோம். அந்த வகையில் போதை யற்ற வள மான வலி. கிழக்கை உரு வாக்க எமக்கு ஆதரவை வழங்குங்கள்.- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# பழுகாம வட்டார மக்களின் நலனோம்புக்கு எனது கொடுப்பனவுகளை வழங்குவேன்

## பழுகாம வட்டார தமிழரசுக் கட்சி வேட்பாளர் இந்திரநாதன் தெரிவிப்பு

பழுகாம வட்டாரத்துக்கான தேர்தல் பரப்புரை அலுவலகம் வட்டார வேட்பாளர்களான நா.இந்திரநாதன் மற்றும் வீ.அரசரெத்தினம் ஆகியோரின் பிரசன்னத்துடன் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பெருந்திரளான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வேட்பாளர் நா.இந்திரநாதன் உரையாற்றுகையில், இந்த தேர்தலானது தேசிய கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு ஒரு சவாலான தேர்தலாகும். நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை வரைபடத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரம் மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்தது. அந்த நிறமானது இந்த முறை சிவப்பாக மாற்றுவதற்கு பயங்கரமான பிரயத்தனம் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால், மட்டக்களப்பில் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றும்.

நான் இத்தேர்தலில் வெற்றி பெற்றால் எனக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை எனது பழுகாம வட்டார மக்களின் சமூக நலனோம்பு திட்டங்களுக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், வாழ்வாதார திட்டங்களுக்கும் வழங்கி வைப்பேன்.– என்றார்.

# திட்டமிடப்பட்ட அபிவிருத்திகளை மேற்கொள்வதே நோக்கமாகும்



## வேட்பாளர் நிசார் தெரிவிப்பு

(றிபாஸ்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதிகமான வட்டாரங்களை வென்று அட்டாளைச்சேனை பிரதேச சபையை ஆட்சி அமைக்கும் என ஜும்ஆ பள்ளி வட்டார வேட்பாளர் யூ.எல்.நிசார் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் மொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அ.இ.ம. காங்கிரஸ் கட்சி சலுகைகளுக்காகவோ அல்லது பணத்துக்காகவோ சோரம் போகின்றவர்கள் அல்ல நாம். எமது மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வதற்காகவே பயணித்துக் கொண்டிருக்கின்றன

கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு மக்களின் கைகளிலேயே உள்ளது. மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கட்சியும் அதன் தலைமையும் என்றால் அது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்பதை யாரும் மறுக்கவே முடியாது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட பாலமுனை, ஒலுவில் தீகவாபி, ஆலங்குளம் திராய்க்கேணி போன்ற பிரதேசங்களில் ஒழுங்கு முறையான அபிவிருத்திகளை செய்வதுடன் மக்களின் தேவைகளையும், வாழ்வாதார திட்டங்களையும் பெற்றுக் கொடுப்பதே எமது கட்சியினதும், வேட்பாளர்களதும் நோக்கமாகும்.

தேர்தல்கள் வருகின்ற போது பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிவிட்டு தெரிவு செய்யப்பட்ட பின்பு மக்களை மறந்து விடுகின்றனர்.

அவ்வாறானவர்களை மக்கள் இனம் கண்டு இத்தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய ஜனநாயக மாக்சிச ஜனநாயக்கட்சியின் மே தினம் இந்த வருடம் யாழ்ப்பாணத்தில்!

(வடமராட்சி நிருபர்)

தேசிய இனங்களின் பிரச்சினைக்கு சுயாட்சித் தீர்வை முன்வை, தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் தேசிய உரிமைகளை வழங்கு, தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கு ஆகிய கோரிக்கைகள் உட்பட பல்வெறு கோரிக்கைகளை முன்வைத்து புதிய ஜனநாயக மாக்சிச ஜனநாயக்கட்சி இந்த வருடம் மே தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுகின்றது.

இந்தக் கட்சி முன் வைத்துள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு,

✦ ஐ எம் எப்ஆணைக்கு அடிபணிந்து மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றாதே !!

✦ இந்தியாவின் ஒப்பந்தங்கள் மூலம் நாட்டின் வளங்களை வழங்காதே

✦ அமெரிக்க இந்திய ஒப்பந்தங்கள் நாட்டிற்கு நாசங்களை ஏற்படுத்தும் !!

✦ மலையக மக்களுக்கு காணி–வீடு–கிராமக் கட்டமைப்பை வழங்கு 11

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 2500 வழங்கு!

✦ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உரிய தீர்வை வழங்கு !! பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்! புதிய சட்டம் வேண்டாம் !!

✦ சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய் !!

✦ எமது கடற்பரப்பில் இந்திய றோலர்ப் படகு மீன் கொள்ளைக்கு முடிவு கட்டு!!

✦ கச்சதீவு நமக்கே சொந்தம்! இந்தியாவிற்குத் தாரைவார்க்காதே !! பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு நட்டஈட்டுத் தொகை வழங்கு

✦ மருந்து இறக்குமதியில் இந்திய மருந்து மாபியாக்களுக்கு அடிபணியாதே!!

✦ அமெரிக்க–இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களே பலஸ்தீன மக்களை கொன்று குவிப்பதை நிறுத்து!

✦ இனச் சுத்திகரிப்பை நிறுத்து !!

✦ கல்வியும் சுகாதாரமும் தனியார்மயமாவதைத் தடுத்து நிறுத்து !!

✦ பெண்கள் மீதான உழைப்புச் சுரண்டலை நிறுத்த வழிசெய்! உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவதற்கு ஆவன செய் !!

✦ பெண்களுக்கு எதிராக அனைத்து வன்முறைகளையும் நிறுத்தி சமத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வழிசெய்

✦ தொடரும் சிறுவர் துஸ்பிரயோகங்களை முடிவுக்கு கொண்டு வா அவர்களின் உடல் உள ஆரோக்கியத்திற்கு உத்தரவாதம் வழங்கு

✦ போதைப் பொருள் பரவலையும் பாவனையையும் தடுத்து நிறுத்து.





# இளையோர் மத்தியில் போதை விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாக்க வேண்டும்!

## மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கில் கரையோர பிரதேசங்களில் காணப்படும் போதைப் பொருள் பாவனை குறித்து இளையோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி,போதைப் பொருள் பாவனையில் இருந்து இளையோரை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.



மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'போதைப்பொருள் வேண்டாம் நமது இளையோரை பாதுகாப்போம்' எனும் தொனிப் பொருளில் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (29) மன்னாரில் இடம் பெற்றது.

இதன்போது இளைஞர் யுவதிகள், திணைக்கள அதிகாரிகள் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் உள்ள கரையோரப் பகுதிகள் போதை பொருள்களின் மையங்களாக இலங்கையில் உள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக இன்று காணப்படுகின்றது.

இந்தப் போதைப் பொருள்களை எமது இளையோர், சிறுவர்கள் மத்தியில் மட்டுமல்ல, குறிப்பாகப் பாடசாலை சமூகத்தை சீரழிக்கக் கூடிய நிலையில் பரந்து பட்டு காணப்படுவதை நாங்கள் ஊடகங்கள் மூலம் பார்க்கின்றோம்.

போதைப் பாவனையை எவ்வாறு கட்டுப்படுத்துவது, அதில் இருந்து எவ்வாறு எமது இளையோர்களை பாதுகாப்பது என்பது குறித்து நாம் விழிப்புணர்வை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

அநீதிக்கு எதிராக நாங்கள் எவ்வாறு கூட்டாக குரல் கொடுப்பது?. தெளிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த விழிப்புணர்வை இளையோர் மத்தியில் முன்னெடுத்து வருகிறோம்.

அதனுடன் தொடர்புபட்டுக் கடமையாற்றுகின்றவர்களையும் உள்ளடக்கி கூட்டுக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறோம்.– என்றார்.

இதன்போது தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் பசீர் முகமட் றசாக் கலந்து கொண்டு விழிப்புணர்வு கருத்துக்களை முன் வைத்தார்.

# உலக இஸ்லாமிய தமிழ் மாநாட்டில் நிசாம் காரியப்பரின் நூல் வெளியீடு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி திருச்சி எம்.ஐ.ஈ.டி. பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ள உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஒன்பதாவது மாநாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர் எழுதிய "அந்த கல்முனை குடி நாள்கள்" கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த மாநாட்டின் முதல்நாள் விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதம விருந்தினராக பங்கேற்று, இந்தக் கவிதை நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கை சார்பாக பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும்



நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உட்பட மற்றும் சில அரசியல் பிரமுகர்களும் மூத்த கலை, இலக்கியவாதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.









# பெண்களுக்கான தொழில் பயிற்சி வள நிலைய தையல் கண்காட்சி

பெண்களை ஆழுமை மிக்கவர் களாகவும் தமக்கென சுயதொழில் வாய்ப்பை பெறுவதற்கான திறன்களை பெற்றவர்களாகவும் அதற்கான ஒரு வாய்பை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ஆதரவுடன் இயங்கும் "வாகை" பெண்களுக்கான தொழில் பயிற்சி வளநிலையம் கண்காட்சி ஒன்றை ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதனை அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவர் டாக்டர் இராஜம் தெய்வேந்திரன் வைபவ ரீதியாக தொடக்கி வைத்தார்.



புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள வாகை தொழில் பயிற்சி நிலையத்தின் தையற்கலை வகுப்பின் முதல் தொகுதி பயிலுனர்கள் தமது ஆறு மாதகால பயிற்சியை நிறைவு செய்து சான்றிதழை பெற்றுக்கொண்டனர்.இவர்களது தையல் கலை ஆக்கங்க ளைக் காட்சிப் படுத்துவதற்கும் விற்பனை செய்வதற் குமாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதற்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவர் டாக்டர் இராஜம் தெய்வேந்திரன், நிரந்தர உறுப்பினர் டாக்டர் சண் தெய்வேந்திரன், ஐ.எம்.எச்.ஓ. வதிவிடபிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், இணைப்பாளர் துஷாந்தன், ஜி.கிருஷ்ணகுமார் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

புதிய பயிலுனர் அணியின் ஆரம்ப (2025) நிகழ்வும் நடைபெற்றது.

# பசுமை இயக்கத்தின் செம்பசுமை மே தினம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நாளை

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மே தினம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 03 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந் துள்ள இளங்கலைஞர் மன்ற மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலை மையில் நடைபெறவுள்ள இந்த உலகத் தொழிலாளர் தினப் பொதுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தொடக் கவுரை ஆற்றவுள்ளார்.

சமூக, அரசியல் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா, ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே. வி. தவராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள் ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினம் "சுற்றுச்சூழல் பாதுகாப்பே உழைப்புக்கான உத்தர வாதமும் எம் இருப்புக்கான உத்தரவாத மும் ஆகும். உள்ளூராட்சித் தேர்தலில் இவற்றை உறுதி செய்வோம்" என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# 'நீர்த்த கடல்' ஆவணப்படம் திரையிடல்!

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, தெல்லிப்பளையிலுள்ள "ஒபர் சிலோன்" நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் திரையிடப்பட்டது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளையிலுள்ள "ஒபர் சிலோன்" நிறுவனத்தின் ஊழியர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்த சிவராசா மரியறோசரி,

"கடல் வளங்கள் தற்போது பல்வேறு செயற்பாடுகளால் அழிக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வருகின்றன. இதனால் சிறுதொழில் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. கடற்றொழில் அமைச்சர் இதனைக் கண்டுகொள்ள வேண்டும். முன்னைய காலங்களில் கடலில் அதிக வளங்கள் இருந்தன. தற்போது அவை அருகிக்கொண்டு செல்கின்றன. அவற்றை முறையாகப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டில் நாம் இன்று இருக்கின்றோம்" எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

வடக்கு – கிழக்கு தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணை மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையை எவ்வாறு பாதிக்கின்றது? அது கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றமை குறிப்பிடத்தக்கது.






# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு

(பாறுக் ஷிஹான்)

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா, எதிர்வரும் 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் ஒலுவிலில் அமைந்துள்ள தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெறவுள்ளது என்று பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீதின் தலைமையிலும் வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில், இரண்டு நாள்களைக் கொண்ட ஆறு அமர்வுகளாகப் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது. 2077 மாணவர்கள் தங்களது பட்டங்களைப் பெற்று வெளியேறவுள்ளனர்.

நடைபெறவுள்ள ஒவ்வொரு அமர்விலும், முன்னணி அறிவியல்சார் நிபுணர் ஒருவர், முக்கிய உரையை ஆற்றவுள்ளனர்.

இதில் முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொட்டகொடவும் இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை பேராசிரியர் கலாநிதி சீதா பி பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் மாண்புமிகு காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் துணைத்தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல் வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் ரீ. வேல்நம்பியும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இடம்பெறவுள்ள பட்டமளிப்பு நிகழ்வில் பிரயோக விஞ்ஞான பீடத்தில் இருந்து 172 மாணவர்களும் பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும் தொழினுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும் கலை கலாச்சார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரி பட்டப்படிப்பு 687 மாணவர்களுமாக 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

# வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் சேவை 5, 6 ஆம் திகதிகள் நிறுத்தப்படும்!

(அபு அலா )

கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் கருமபீட சேவை செயற்பாடுகள் மே மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் இடம்பெறமாட்டாது என்று கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டுக் குறித்த இரு தினங்களில், கிழக்கு மாகாண தலைமைக் கருமபீடம் உட்பட மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இயங்கி வரும் கருமபீடங்கள் யாவும் மூடப்படவுள்ளன. வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் சேவைகள் இடம்பெறமாட்டாது.

அதன் பின்னர் 7 ஆம் திகதி இந்தச் சேவை வழமை போன்று இடம்பெறும் என்று கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.







# தேர்தல் முறைப்பாடுகளை கையாளுவது தொடர்பில் திருமலையில் விளக்கமளிப்பு

**(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ.எச்.)**

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான முறைப்பாடு களை கையாளுவது தொடர்பில் திருகோணமலை மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தலைமையில், திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தற்போதைய உள்ளூராட்சி முறைமையின் தனித்துவமான அம்சங்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இந்தச் செயலமர்வில் விரிவான முறையில் விளக்கமளித்தார்.

அத்துடன் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நிகழ்நிலை மூலம் செயலமர்வில் இணைந்து விளக்க உரையாற்றினார்.

தேர்தல்களின் போது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்புக்கள் குறித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கலாநிதி தினேஷ் கருணாநாயக்க மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குண சேகர ஆகியோரால் தேர்தல் சட்டத்தின் சட்ட விதிகள் குறித்தும் உரைகள் வழங்கப்பட்டன.

தேர்தல் சட்டம், தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ மையம் மற்றும் பொலிஸாரின் பொறுப்பு, தேர்தல் செலவின ஒழுங்குமுறை, பிரச்சார அலுவலகங்கள் மற்றும் பிரசார கட்டுப்பாடுகள் குறித்த தகவல்கள் தொடர்பில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் பி. பீ. சி. குலரத்னவால் தெளிவூட்டப்பட்டது. மேலும், பொலிஸ் அதிகாரிகளின் தேர்தல் கடமைகள் குறித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க விளக்கமளித்தார்.

இந்தச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.கே.டி. நிரஞ்சன், பொலனறுவை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடை மழைக்கு பின்னர் தொடர்ச்சியாக டெங்கு களத் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் காணப்படுவதில் இப்பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டவரின் வீட்டின் சுற்றுச் சூழலை அவதானித்ததன் பின்னர் அந்தப் பகுதியில் டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய அபாயம் காணப்பட்டமையால் அந்தப் பகுதிகளில் உள்ள பல வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

அத்துடன் வீடுகள் மற்றும் சூழல்களை டெங்கு நுளம்புகள் பரவக் கூடியதாக வைத்திருந்த சிலருக்கு எதிராக வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டது. எச்சரிக்கையுடனான ஆலோசனையும் வழங்கப்பட்டது

டெங்குக் தடுப்புக் களப்பணியானது கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்குக் களத்தடுப்பு பணியாளர்கள் அடங்களான குழுவினர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குறுகிய காலத்திலும் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்கு வீட்டின் உட்புறத்தையும் சுற்றுப்புற சூழலையும் தொடர்ச்சியாக அவதானித்து டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களைச் சுத்தமாக வைத்திருப்போம் எனும் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பொது மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன.

# அருவி பெண்கள் வலையமைப்பு நடத்திய தமிழ், சிங்களப் புத்தாண்டு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் தமிழ் சிங்களப் புத்தாண்டு விழா மட்டக்களப்பு பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி மயூரி ஜனன் தலைமையில் பாட்டாளிபுரம் விளையாட்டு நடைபெற்ற தமிழ் சிங்களப் புத்தாண்டு விழாவில், அருவி பெண்கள் வலையமைப்பின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், வாகரை தொடக்கம் வெல்லாவெளி வரையான அருவி பெண்கள் வலையமைப்பு கடமையாற்றும் பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச மட்ட குழுக்களின் அங்கத்தவர்கள், சிறு குழுக்களின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது விநோத விளையாட்டுக்கள், அழகுராணிப் போட்டி, விநோத உடைப்போட்டி உள்ளிட்ட போட்டிகள் நிகழ்த்தப்பட்டதுடன், வயோதிபர்களும், இளைஞர்களும் இந்தப் போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்னர். இதன்போது பாரம்பரிய உணவுப் பணடங்கள் பகிரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மூன்று நாள்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள், வளாகங்கள் மற்றும் நிறுவனங்களில் பயிலும் இளமாணி மற்றும் பட்டமேற்க் கல்வி மாணவர்களுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் கபில செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.




# கோயில் சுவர் இடிந்து விழுந்து 7 பேர் உயிரிழப்பு; பலர் காயம்



ஆந்திரப் பிரதேசம் - விசாகப்பட்டினத்தின் சிம்மாசலம் கோயிலில் புதிதாக கட்டப்பட்ட சுவர் இடிந்து விழுந்ததில் 7 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ளது சிம்மாசலம் கோயில். இங்கு சந்தனோத்சவம் திருவிழாவையொட்டி புதன்கிழமை அதிகாலையில் இருந்தே தரிசனதுக்காக பக்தர்கள் குவிந்திருந்தனர். அப்போது, 300 ரூபா கட்டண வரிசையில் பக்தர்கள் நின்றிருந்தபோது, அருகில் இருந்த சுவர் திடீரென இடிந்து விழுந்தது.

புதிதாக கட்டப்பட்டு 20 நாள்களே ஆன அந்த 20 அடி சுவர் இடிந்து விழுந்ததில், வரிசையில் நின்றிருந்த பக்தர்கள் பலரும் இடிபாடுகளில் சிக்கினர். இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த பலரும் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டனர்.

இந்தக் கட்டிட விபத்து குறித்து தகவல் அறிந்த சில நிமிடங்களில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர், பொலிஸ் மற்றும் தீயணைப்பு படையினர் இணைந்து இடிபாடுகளில் சிக்கிய மக்களை மீட்கும் பணியை தொடங்கினர். இதில் பலர் மீட்கப் பட்டனர்.

பலத்த காற்று வீசியதில், புதிதாக கட்டப்பட்ட கோயில் சுவர் இடிந்து விழுந்ததாகவும், அந்தச் சுவர் பலவீனமான அடித்தளத்தைக் கொண்டிருந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# தே.மு.தி.க.செயலாளராக விஜய பிரபாகர் நியமனம்



தே.மு.தி.க. இளைஞரணி செயலாளராக விஜய பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிகையில்,

“தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின், இளைஞர் அணி செயலாளராக வி.விஜய பிரபாகர், இன்று முதல் நியமிக்கப்படுகிறார். அவருக்கு கழக நிர்வாகிகள், மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், வார்டு, ஊராட்சி, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் முழு ஒத்துழைப்பு தந்து தேமுதிக திராவிடகழகம் வளர்ச்சி பெற பாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பிரேமலதா, ஜனவரி 9 இல் கடலூரில் தே.மு.தி.க. மாநாடு நடைபெறும் என்றார். மேலும், கூட்டணி குறித்து தேர்தல் நெருங்கும்போது முடிவெடுக்கப்படும் என்று கூறினார்.

முன்னதாக, தே.மு.தி.க - தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் இன்று தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, வெள்ளிச்சந்தையில் நடைபெற்றது. இதில், தலைமைக் கழக நிர்வாகிகள் ஒருமனதாக தேர்வு செய்து பதவி அறிவிப்பு வெளியிடப் பட்டது.

அதன்படி, கட்சியின் பொதுச் செயலாளராக பிரேமலதா விஜயகாந்த் தொடர்கிறார். வி. இளங்கோவன் அவைத் தலைவராகவும், எல்.கே. சுதீஷ் பொருளாளராகவும், ப. பார்த்தசாரதி தலைமை நிலையச் செயலாளராகவும், அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் கொள்கை பரப்புச் செயலாளராகவும், எம்.ஆர்.பன்னீர்செல்வம், சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும் அறிவிக்கப்பட்டனர்.

# கர்நாடகாவில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியவர் அடித்துக் கொலை



கர்நாடகாவில் உள்ள மங்களூரில் கிரிக்கெட் போட்டியின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக முழக்கம் எழுப்பிய நபர் மீது ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியதில் அவர் உயிரிழந்துள்ளார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த பொலிஸார் 12 பேரை கைது செய்தனர்.

கர்நாடக மாநிலம் மங்களூருவில் நேற்று முன்தினம் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அதனை நூற்றுக்கும் மேற்பட்டோர் கண்டு ரசித்தனர். அப்போது கூட்டத்தில் இருந்த 30 வயதான ஒருவர் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என முழக்கம் எழுப்பினார் என கூறப்படுகிறது. அவரை சச்சின் (வயது 26) என்பவர் கண்டித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதையடுத்து 20 இற்கும் மேற்பட்டோர் கும்பலாக சேர்ந்து அந்த நபரை சரமாரியாக தாக்கினர்.

இதில் காயமடைந்த அந்த நபரை தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அதிகப்படியான ரத்தப் போக்கு காரணமாக அவர் உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக வென்லாக் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக மங்களூர் போலிஸார் 19 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். சம்பவ இடத்தில் பதிவான சி.சி.டி.வி. காட்சி ஆதாரங்களின் அடிப்படையில் 12 பேரை கைது செய்தனர். மங்களூர் பொலிஸ் ஆணையர் அனுபம் அகர்வால் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.




# இந்தியா - பாகிஸ்தான் இடையே 6 ஆவது நாளாக துப்பாக்கிச் சூடு

இந்தியா - பாகிஸ்தான் இடையே இன்று 6 ஆவது நாளாக பரஸ்பரத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் 6 ஆவது நாளாக துப்பாக்கிச் சூடு நடத்தி வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கு, இந்திய இராணுவத் தரப்பிலிருந்து பதிலடித் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஜம்மு - காஷ்மீரின் எல்லைப் பகுதிகளில் கடந்த 6 நாள்களாக துப் பாக்கிச் சூடு நடத்தப்பட்டு வருகிறது.

# இந்திய இராணுவ தாக்குதலுக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுக்கும்

## பாகிஸ்தான் அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த 24 முதல் 36 மணி நேரத்தில் இந்தியா தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக நம்பகமான உளவுத்துறை தகவல் கிடைத்துள்ளதாக பாகிஸ்தான் அமைச்சர் அதாவுல்லா தார் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவின் எந்தவொரு இராணுவ தாக்குதலுக்கும் பாகிஸ்தான் நிச்சயமாக பதிலடி கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்றும், இந்தியாவின் குற்றச்சாட்டுகளை தான் மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதல் குறித்து நடுநிலையான நிபுணர் ஆணைக்குழு மூலம் நம்பகமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பதாக கூறியபோதிலும், இந்தியா மோதல் பாதையைத் தெரிவு செய்கிறது என்றும் அவர் கூறினார்.



# வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றார் ஜாக்கி சான்

ஜாக்கி சான் 90 களில் சர்வதேச திரையுலகில் பல்வேறு வெற்றி திரைப்படங்களில் நடித்துள்ளார்.

நடிகராக மாத்திரமன்றி தி ஃபியர்லெஸ் ஹைனா (1979), ஹூ ஆம் ஐ மற்றும் பொலிஸ் ஸ்டோரி (1985) உள்ளிட்ட பல திரைப்படங்களை அவர் இயக்கியுள்ளார்.

ஜாக்கி சான் கடந்த 2023 ஆம் ஆண்டு வெளியான ரைட் ஆன் திரைப்படத்தில் இறுதியாக நடித்திருந்தார்.

இத்திரைப்படம் ஜப்பானில் அதிக வசூல் செய்த சீனத் திரைப்படமாகவும், 2023ஆம் ஆண்டு மலேசியாவில் அதிக வசூல் செய்த சீன திரைப்படங்களில் 3ஆவது இடத்தையும் பிடித்திருந்தது.

இந்தநிலையில் ஜாக்கி சானுக்கு 78 ஆவது லோகார்னோ திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




கலையுலகில் அவரது பங்களிப்பை பாராட்டி ஜாக்கி சானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

புதன்கிழமை 30/04/2025

## மார்க் கார்னிவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

கனடா பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள மார்க் கார்னேவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதன் மூலம் இந்தியா - கனடா இடையே பாதிப்படைத் 02▶



# வரி, இணைப்பு அச்சுறுத்தல்களுக்கு இடையே கனடாவில் ஆட்சியைப் பிடித்த லிபரல் கட்சி

**கனடாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேசியதற்கு எதிராக லிபரல் கட்சி மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் அதற்குகை கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. வரி, இணைப்பு அச்சுறுத்தல்களுக்கு இடையே கிடைக்கப் பெற்ற இந்த வெற்றியை பிரதமர் மார்க் கார்னி உற்சாகம் பொங்க வரவேற்றுள்ளார்.**

தேர்தல் வெற்றிக்குப் பிறகு வெற்றிக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மார்க் கார்னி,

“தேர்தல் முடிவுகள், கனடாவை ஆதரிக்கவும் அதனை வலுவாகக் கட்டியெழுப்பவும் மக்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். வரவிருக்கும் நாள்களும் மாதங்களும் சவாலானதாக இருக்கும். அவை சில தியாகங்களை கோரும். ஆனால் எங்கள் தொழிலாளர்களையும் எங்கள் வணிகங்களையும் ஆதரிப்பதன் மூலம் அந்த தியாகங்களைப் பகிர்ந்து கொள்வோம். அமெரிக்க துரோகத்தின் பாடங்களை கனடா மக்கள் ஒருபோதும் மறக்க வேண்டாம்.” என்று வலியுறுத்தினார்.

ஏற்கனவே தொடர்ந்து 3 முறை வெற்றி பெற்று ஆட்சியில் 02▶

# காலிஸ்தான் தலைவர் ஜக்மீத் சிங் படுதோல்வி

கனடா நாடாளுமன்றத் தேர்தலில் காலிஸ்தான் ஆதரவாளரும் என்.டி.பி., கட்சித் தலைவருமான ஜக்மீத் சிங் படுதோல்வி அடைந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட என்.டி.பி எனப்படும் புதிய ஜனநாயக கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது.

அக்கட்சியின் தலைவரும், காலிஸ்தான் ஆதரவாளராக அறியப்படுபவருமான ஜக்மீத் சிங் தோல்வி அடைந்துள்ளார். இதையடுத்து, கட்சித் தலைவர் பொறுப்பில் இருந்து பதவி விலகல் செய்வதாகவும் அவர் அறிவித்துள்ளார். 02▶





# இந்தியப் பெண் சடலமாக மீட்பு

கனடாவுக்குக் கல்வி கற்கச் சென்ற இந்திய மாணவி ஒருவர் மாயமான நிலையில், அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாபைச் சேர்ந்த வன்ஷிகா (வயது 21) என்னும் இளம்பெண், இரண்டரையாண்டுகளுக்கு முன் கல்வி கற்பதற்காக கனடாவுக்குச் சென்றுள்ளார். வன்ஷிகாவின் தந்தையான தேவிந்தர் சிங், அரசியல் கட்சி ஒன்றின் தலைவர்களில் ஒருவராவார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை, அதாவது, ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி, வாடகைக்கு அறை ஒன்றைப் பார்ப்பதற்காக இரவு 8.00 முதல் 9.00 மணியளவில் வெளியே சென்றுள்ளார் வன்ஷிகா.

இரவு 11.40 மணியளவில் அவரது கையடக்கத்தொலைபேசி 'ஓப்' செய்யப்பட்டுள்ளது. இத்தனைக்கும், மறுநாள் அவருக்கு ஒரு முக்கியமான தேர்வு இருந்துள்ளது.

இப்படி தாமதமாக வெளியில் தங்குவதோ, மொபைலை 'ஓப்' செய்வதோ வன்ஷிகாவின் வழக்கமல்ல என்கிறார்கள் அவரது தோழிகள்.

வன்ஷிகாவின் பெற்றோருக்கு தகவலளிக்கப்பட, அவர்கள் தூதரகத்தை அணுக, வன்ஷிகாவை தேடும் முயற்சியில்தீவிரப்படுத்தியுள்ளார்கள்.

ஆனால், தற்போது வன்ஷிகா தொடர்பில் ஒரு துயரச் செய்தி கிடைத்துள்ளது. Ottawa விலுள்ள கடற்கரை ஒன்றில் வன்ஷிகாவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன வன்ஷிகா சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயம் கடும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ள நிலையில், அதன் பின்னணியில் குற்றச்செயல் ஏதேனும் இருக்கக்கூடும் என அவரது குடும்பத்தினர் சந்தேகிக்கிறார்கள்.

வன்ஷிகா மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





## மார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த உறவு மீண்டும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடாவில் காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு, அங்குள்ள இந்திய தூதர் மீது கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இந்திய தூதரக அதிகாரிகளுக்கு மிரட்டல் விடுத்த காலிஸ்தான் தீவிரவாதிகள் மீது, கனடா அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது. இதையடுத்து இருநாட்டு தூதரங்களிலும், ஊழியர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

இந்நிலையில் கனடா பிரதமராக இருந்து ட்ருடா பதவி விலகினார். இது லிபரல் கட்சிக்கு மார்க் கார்னி தலைமை ஏற்க வழிவகுத்தது. பொது தேர்தலில் லிபரல் கட்சி மீண்டும் வெற்றி பெற்று, பிரதமரானால், இந்தியா - கனடா இடையேயான உறவை மேம்படுத்துவேன் என மார்க் கார்னி ஏற்கெனவே கூறியிருந்தார். அதேபோல் பொது தேர்தலில் லிபரல் கட்சி தொடர்ந்து 3 ஆவது முறையாக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவுள்ளது. மார்க் கார்னி புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில் மார்க் கார்னிவுக்கு பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில்,

"கனடாவின் பிரதமராக நீங்கள் (மார்க் கார்னி) தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், லிபரல் கட்சி வெற்றி பெற்றதற்கும் வாழ்த்துகள். இந்தியாவும் கனடாவும் ஜனநாயக மாண்புகள், சட்டத்தின் ஆட்சிக்கான உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் மக்கள் இடையேயான உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன. நமது கூட்டாண்மையை வலுப்படுத்தவும், நமது மக்களுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தவும் தங்களுடன் பணியாற்றுவதை நான் எதிர்நோக்கியுள்ளேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள மார்க் கார்னேவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்திருப்பதன் மூலம் இரு நாட்ட உறவுகள் மீண்டும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியாவில் செல்வாக்குடன் இருந்த காலிஸ்தான் ஆதரவு கட்சியான புதிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் இந்த தேர்தலில் படு தோல்வியடைந்து 3 ஆம் இடத்தை பிடித்தார். அவரது கட்சியும் படுதோல்வியடைந்து ஒற்றை இலக்க இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. அதனால் இக்கட்சியின் ஆதரவை பெற கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி விரும்ப மாட்டார் என கூறப்படுகிறது. புதிய ஜனநாயக கட்சியின் படுதோல்வியை அடுத்து அக்கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் பதவி விலகியுள்ளார். இதன் மூலம் கனடாவில் காலிஸ்தான் கொள்கையை அங்குள்ள மக்கள் நிராகரித்துள்ளனர் என தெரிகிறது.

## வரி, இணைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் லிபரல் கட்சி 4 ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளது. பெரும்பான் மைக்கு போதிய இடங்கள் கிடைக்காவிட்டாலும், சிறிய கட்சிகளின் உதவியுடன் லிபரல் கட்சி ஆட்சி அமைக்கும் என்பதால் அதன் ஆதரவாளர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

கடந்த ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப், கனடா அமெரிக்காவின் மற்றொரு மாகாணமாக இணைய வேண்டும் என்று வலியுறுத்தினார். அப்போது கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோவை ஆளுநர் என ட்ரம்ப் அழைத்தார். கனடாவில் லிபரல் கட்சியின் செல்வாக்கு சரிந்துவிட்டதாக செய்திகள் வெளியான நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ, பிரதமர் பதவியில் இருந்து விலகி மார்க் கார்னியை பிரதமராக்கினார்.

தொழிலதிபரும் வங்கியாளருமான மார்க் கார்னி, இந்த தேர்தலில் ட்ரம்ப் விடுத்த இணைப்பு கோரிக்கைக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொண்டார். கனடாவில் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால், ட்ரம்ப் கூறியது நிஜமாகும் என்றும் அவர் பிரச்சாரம் செய்தார்.

டொனால்ட் ட்ரம்ப்பின் கருத்தை மையப்படுத்தி அவர் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் அவருக்கு கை கொடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## காலிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜக்மீத் சிங் தனது சமூகவலைதள பதிவில் கருத்து தெரிவிக்கையில்,

"புதிய ஜனநாயக கட்சியினர் இந்த நாட்டை கட்டி எழுப்பினர்.

நாங்கள் எங்கும் செல்ல போவதில்லை. தேர்தலில் அதிக இடங்களை வெல்ல முடியாதது எனக்கு ஏமாற்றமே.

கட்சிக்காக நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். பயத்தை விட நம்பிக்கையை நாங்கள் தேர்ந்தெடுப்போம். பிரதமர் கார்னி மற்றும் அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும் வாழ்த்துகள்." என பதிவிட்டுள்ளார்.




# டொராண்டோவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

டொராண்டோவின், ஸ்காப்ரோ Scarborough பகுதியில் செவ்வாய்க் கிழமை மாலை லொறி. பஸ்ஸுடன் மோதிய விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெடோவ்வேல் வீதி Meadowvale Road மற்றும் ஷெப்பர்ட் அவன்யூ கிழக்கு Sheppard Avenue East சந்திப்பில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவர் 30 வயது மதிக்கத் தக்க ஆண் என்றும், இந்த விபத்தில் வேறு எவரும் காயமடையவில்லை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



# டொராண்டோவில் மரக்கிளை முறிந்து விழுந்ததில் பெண் காயம்

டொராண்டோ மத்திய பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் வீதியில் மரக்கிளை முறிந்து விழுந்ததில் பெண் ஒருவர் காயம் அடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் காஸா லோமா Casa Loma பகுதியில் உள்ள சென் கிளயார் அவன்யூ St. Clair Avenue West வீதிக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பெண் உயிருக்கு ஆபத்தான நிலையில், அருகிலுள்ள மருத்துவ மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பலத்த காற்று காரணமாக மரக்கிளை முறிந்து விழுந்திருக்கலாம் என கூறப்படுகிறது.